ஈழநாடு இலங்கை தமிழர் 20-1-79

# தனிநாடுகோரிக்கையை ஆதரிக்க மாட்டோம்!

## இலங்கையில் இந்திய மந்திரி தாரியா அறிவிப்பு!!

கொழும்பு, ஜன. 20—

இலங்கை தமிழர் கட்சியின் தமிழருக்கான தனிநாடு கோரிக்கையை இந்தியா ஆதரிக்கவில்லை என்று மத்திய மந்திரி மோகன் தாரியா கூறினார்.

இலங்கைசென்றிருந்த மந்திரி மோகன்தாரியா, டெல்லி திரும்புவதற்கு முன் கொழும்பில் நிருபர்கள் கூட்டத்தில் பேசும் போது கூறியதாவது:—

**இந்தியா ஆதரிக்க வில்லை**

மொழி அடிப்படையில் இலங்கையை பிரிப்பது யாருக்கும் நல்லதல்ல. அப்படிப்பட்ட ஒருகோரிக்கையை (தனித்தமிழ் நாடு) இந்தியா எப்போதுமே ஆதரிக்க முடியாது.

இலங்கையை பிரிக்க வேண்டும் என்ற தமிழர் விடுதலை முன்னணியின் கோரிக்கையை இந்தியாவில் உள்ள ஜனதா அரசு எப்போதும் ஆதரிக்காது.

**தமிழ்நாட்டு கட்சிகள்**

இலங்கை தமிழர் விடுதலை முன்னணியின் கோரிக்கைக்கு இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள எந்த அரசியல் கட்சியுமே ஆதரவு அளிக்காது.

தமிழ்நாட்டில் உள்ள சில கட்சிகள் அதற்கு ஆதரவு அளிக்க விரும்பினாலும் கூட, மத்திய அரசு அதை அனுமதிக்காது. ஒன்றுபட்ட இலங்கைதான் எங்களது விருப்பம்.

**இலங்கை சினிமா படங்கள்**

இலங்கை சினிமா படங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றை இந்தியாவுக்கு இறக்குமதி செய்வது குறித்து இந்தியா திரும்பியதும் தமிழ்நாடு முதன் மந்திரியுடன் ஆலோசனை நடத்த இருக்கிறேன்.

அதே சமயம் வெற்றிலை இறக்குமதி செய்வதற்கு எந்த வழியிலும் கட்டுப்பாடோ அல்லது தடையோ இல்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வாறு மோகன் தாரியா கூறினார்.

மந்திரி மோகன் தாரியா

# Pongal Gift for Estate Workers in Sri Lanka

1-1-79 Hindu

COLOMBO, Dec. 31.

Every estate worker in Sri Lanka will receive a Pongal gift of Rs. 5,000 and this scheme will be inaugurated on "Mattu Pongal" day (January 15) at the hill country town of Hatton.

This was announced by Mr. S. Thondaman, Minister for Rural Industrial Development, at a seminar held at Nuwara Eliya town hall.

Mr. Thondaman, who is also in charge of the National Milk Board, said the gift would be in the form of a loan to every estate worker, willing to purchase cows and undertake dairy farming in the estate.

He said there were hundreds of youngsters in the plantation sector, who were unemployed. Under this scheme, a number of cottage industries, such as making fertilizer out of tea waste, tailoring and making of baskets would be started in the plantation areas and villages.—FOC.

# Destruction of Coins to be Made An Offence

1-1-79 Hindu

COLOMBO, Dec. 31.

Destruction of monetary coins in circulation is to be made an offence in Sri Lanka. The Government is to rush through Parliament next month an amending legislation to this effect.

The five and ten cents copper coins are now being melted as the hardware items made out of these coins fetch more than their face value, leading to acute shortage of these coins in the island.

Traders and the Transport Board are now using five and ten cents postal stamps for monetary transactions owing to the shortage of these coins.

The new law prescribes a fine of Rs. 500 or a month's rigorous imprisonment or both for the destruction of coins.

The treasury has already placed an order with the London mint for five and ten cents aluminium coins whose face value is less than its monetary value.—PTI.

# Estate Workers: MP Cautions Against Sri Lanka Plan

2-11-78 Hindu

NEW DELHI, Oct. 31.

Mr. K. T. Kosalram, member of the Lok Sabha has cautioned the Government against allowing re-employment of repatriated Indian 'plantation workers in Sri Lanka on contract basis.

In a letter to the Prime Minister, Mr. Morarji Desai, Mr. Kosalram has referred to "belated realisation" by the Sri Lanka Government that it could not run the tea industry without the services of trained Indian plantation workers and said there was a move by the Sri Lanka plantation authorities to re-employ the repatriated Indian workers on contract basis for brief periods, without granting any permanent benefits.

"The Government should not allow exploitation of people of Indian origin as contract labour which is nothing but slave labour. We must insist that if Sri Lanka wanted the services of Indian workers, they should be treated on par with the local people and granted full citizenship rights. Further, the Sri Lanka Government should grant citizenship rights to all Indian settlers, including about one lakh persons who were earlier declared as "stateless" persons following the Shastri-Sirimavo pact, he said.

Mr. Kosalram also stated that there was a feeling in the South, particularly in Tamil Nadu that the Central Government was not protecting the interests of Indians in Sri Lanka the same way as it had done in the case of Indians in Kenya, Uganda, Tanzania and other African countries. "It is appreciated that the new Government in Sri Lanka headed by Mr. Jayawardene has adopted a liberal attitude towards Tamils than the previous Governments. I would earnestly request you to seize the present opportunity in arriving at a satisfactory solution to the various problems of the people of Indian origin in Sri Lanka", he said.

The total number of people repatriated to India following the Shastri-Sirimavo agreement so far, was estimated at 2.5 lakhs and this had put Sri Lanka tea industry in a serious crisis, leading to the loss of Rs. 53 crores to that country by way of export earnings, he pointed out.—Our Special Correspondent.

தமிழாராய்ச்சி மகாநாட்டு மரணங்கள்

# நினைவாலயத்தில் மத குருமார் கூடி அஞ்சலி

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் 5வது நினைவு தினம் புதன் கிழமை காலை சமயாசார வைபவமாக வழக்கம்போல கொண்டாடப்பட்டது.

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள நினைவாலயத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கிறிஸ்தவ, இஸ்லாமிய, சைவமத குருமார் பங்குபற்றியிருந்தனர்.

அந்தந்த மதங்களுக்குரிய முறையில் ஆராதனை வழிபாடு, லிங்கபூசை முதலியன சிறப்பாக இடம்பெற்றன. பெருந்தொகையான மக்கள் பங்குபற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்கள்.

இந்த நினைவாலயத்தை அமைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்து பொருளுதவி புரிந்த கொழும்பு வர்த்தகர் திரு. சி. ராசா, மட்டக்களப்பைச் சேர்ந்த வண. யோசப் மேரி, தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைத்தலைவர் போராசிரியர் சு. வித்தியானந்தன் (உபவேந்தர்) தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் முதலான அநேக முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# Sri Lanka's Massive Development Plan

28-12-78 Hindu

COLOMBO, Dec. 27.

The Government of Sri Lanka will spend Rs. 45,000 millions on a massive development programme the Finance Minister Mr. Ronnie de Mel announced while winding up a committee stage debate on the Budget on Friday.

The Minister confirmed that Sri Lanka would receive Rs. 12,000 millions in foreign aid. Thirty five per cent of the aid, including financial commitment by Britain for the construction of the Victoria Reservoir, would come in as grants.

Pointing out that Sri Lanka received only Rs. 3,000 millions to Rs. 4,000 millions in the past, Mr. de Mel said the assistance that was forthcoming now indicated that the World Bank and other international financial institutions had accepted the policies of the Government and had full confidence that it would unlike the previous regime implement them.

He said the acceptance was borne out by the fact that international banks had opened branches in this country after about 26 years. The largest banking institution in Britain had opened a branch in Sri Lanka and 14 others had sent in applications seeking permission.

The House adopted the third reading of the Budget without a vote.—FOC.

EROS MADRAS

www.padippakam.com

www.padippakam.com

# தமிழீழ விடுதலைக் கிளர்ச்சிக்கு கம்யூனிஸ்ட் சாயம் பூச திட்டம்!

சுதந்திரன் 7-1-79

## அமெரிக்க உதவியைப் பெற இப்படியும் ஒரு தந்திரம்!

அமெரிக்காவின் உதவிகளை 'சிறிலங்கா'வுக்கு தாராளமாகப் பெறும் நோக்குடனும், தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு அமெரிக்காவினதும் ஏனைய மேற்குநாடுகளினதும அனுதாபத்தையும் ஆதரவையும் அறவே இல்லாமற்செய்யும் எண்ணத்துடனும், தமிழர் போராட்டத்துக்கு கம்யூனிஸ்ட் சாயம் பூசி, கம்யூனிஸ்ட் நாடுகளின் ஊடுருவல் வடக்கு கிழக்கில் அதிகரித்திருப்பதாக அமெரிக்காவை நம்பவைக்கும் முயற்சியொன்று அரசாங்க உயர் மட்டத்தில் நடைபெற்று வருவதாகக் கூறப் படுகிறது.

இதன் பின்னணியிலேயே தமிழர் போராட்டத்துக்கு கியூபாவின் உதவி நாடப்பட்டிருப்பதாக 'யூனெஸ்கோ' மாநாட்டில் தம்மிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின அண்மையில் ஒரு கதையை அவிழ்த்து விட்டிருப்பதாகவும் இதே வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்கா இதுவரை சிறீலங்காவுக்கு பல உதவிகளையும், கடன்களையும், தருவதாக வாக்களித்துள்ளதேதவிர, எந்தக்காத்திரமான உதவியும் இன்னும் வந்துசேரவில்லை. பொதுவாக கம்யூனிஸ்ட் ஊடுருவல் உள்ள நாடுகளுக்கே, அதிலிருந்து கடைத்தேற அமெரிக்கா உதவிபுரிவது வழக்கம். சர்வதேச நாடுகளில் இக் கொள்கையையே அமெரிக்கா கடைப்பிடித்து வந்திருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை— 1977 பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சி முற்றாக வேரறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் கம்யூனிசத்தால் ஆபத்து இருப்பதாக அமெரிக்காவை நம்பவைத்து, உதவிகளைப் பெற்றுக்கொள்ள சிறீலங்கா அரசினால் முடியவில்லை.

அதேசமயம் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் அமெரிக்க ஜனதிபதி ஜிம்மிகார்ட்டர் மிகவும் அழுத்தமாக வற்புறுத்திவருவதானல்— தமிழீழ மக்களின் சுயநிர்

—8-ம் பக்கம் பார்க்க

தமிழர்கள் கம்யூனிஸ்ட் சார்பானவர்கள் என்பதை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளைக் கொண்டு நம்பவைக்கும் ஒரு முயற்சியாகவே, "தமிழர்கள் கியூபாவிடம் உதவிகேட்டிருப்பதாக" யூனெஸ்கோ மாநாட்டில் வைத்து பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தம்மிடம் கேட்டதாக கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின ஒரு கதையை அவிழ்த்து விட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

7-1-

## தமிழீழ விடு

—1-ம் பக்கத் தொடர்

ணய உரிமைக்கோரிக்கை பற்றி அவருக்கு சரியாகத் தெரியவரும்போது அக் கோரிக்கைக்கு ஆதரவுதெரிவித்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் சிறீலங்கா அரசைப் பிடித்தாட்டுகிறது.

இந்நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்கோரிக்கைக்கு அமெரிக்காவினதும் மேற்குநாடுகளினதும். அனுதாபமும், ஆதரவும் கிடைக்காமற் செய்யவும், அதே சமயம் அமெரிக்காவின் உதவிகளை விரைந்து பெற்றுக்கொள்ளவும், தமிழ்மக்களின் விடுதலைக்கோரிக்கைக்கு பின்னணியில் கம்யூனிஸ்ட் நாடுகளின் ஊடுருவல் இருப்பதாகவும், வடமாகாணத்தில் கம்யூனிஸ்ட் ஊடுருவல் அதிகரித்து இருப்பதாகவும் அமெரிக்காவை நம்பவைக்கும் முயற்சியில் அரசு இப்போது ஈடுபட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. எப்படியாவது அமெரிக்காவை 'பேய்க்காட்டி' அமெரிக்க உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிநடக்கிறதாம்.

அண்மையில் அமெரிக்காவுக்கும் ஏனைய மேற்குநாடுகளுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் மேற்கொண்டவிஜயத்தின் பெறுபேருக தமிழர்களுக்கு அந்த நாடுகளின் அனுதாபம் திரும்பிவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் ஒருபுறம் ஆட்சியாளரைப் பிடித்தாட்டுகிறதாம்.

## இராணுவம் குவிப்பு!

வடபகுதியில் இராணுவக் கொடுமைகள் குறித்து பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்கள் பலத்த ஆட்சேபனை எழுப்பிய பின்னரும்-அதை அலட்சியப்படுத்தி விட்டு சிங்கள சிறிலங்கா அரசாங்கம் மேலும் இராணுவத்தை வடக்கே குவித்து வருகிறது. மேஜர் ரூபசிங்காவின் தலைமையில் மேலும் 200 இராணுவத்தினரை பலாலி இராணுவத்தளத்துக்கு அரசாங்கம் அனுப்பியுள்ளது.

## 'அமிர்' மார்ச்சில் இந்தியா செல்வார்

யாழ்ப்பாணம்,

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இந்திய சுற்றுப்பயணம் மார்ச் மாதம் இடம்பெறலாம். சுமார் ஒருவாரகாலம் அங்கு தங்கி முக்கிய தலைவர்கள் பலரையும் அவர் சந்திக்க முன்னேற்பாடு செய்யப்பட்டு வருகிறது. திருமதி அமிர்தலிங்கமும் உடன் செல்வார் என்த் தெரிகிறது.

## கலவர நிலையை ஏற்படுத்த சிலசக்திகள் தூபமிடுகின்றன

### ஜனதிபதிக்கு 'அமிர்' கடிதம்

யாழ்ப்பாணம்,

இனப்பூசலுக்கு வித்திட்டு அதன்மூலம் நாட்டில் கலவர நிலையை ஏற்படுத்த சில சக்திகள் தூபமிட்டுவருவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி.ஜனதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிருர்.

இது விஷயமாக 8 பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதமொன்று அவரால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

"ஆயுதப்படைகளின் பக்கபலத்துடன் கலவரத்தை ஏற்படுத்துவதற்கான முஸ்தீபுகள் தற்போது நடப்பதாகவும், தமிழ் இளைஞர்கள் மீது குறிவைத்துப் பழிவாங்கும் நோக்குடன் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தமது கடிதத்தில் விளக்கமாக எடுத்துரைத்திருப்பதாக அறியப்படுகிறது.

இக்கடிதத்தின் பிரதிகள் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## சூறாவளி மோசடி! கொடும்பாவி எரிப்பு!

கல்முனை,

சூறாவளி நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் ஒரு சிலர் மோசடி செய்ததாக கல்முனைப்பகுதியைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் கொடும்பாவி கட்டி எரிக்கப்பட்டது. மோசடி செய்ததாகக் கருதப்படும் நபரின் கொடும்பாவியை வீதியில் போட்டு எரித்து மக்கள் தங்கள் ஆத்திரத்தைத்தீர்த்துக் கொண்டனர்.

## TULF Won't Get Our Support, Says Dharia

Hindu

FROM OUR CORRESPONDENT

COLOMBO, Jan. 18.

"The division of Sri Lanka on linguistic lines will do no good to anyone and we in India can never support the demand", Mr. Mohan Dharia, India's Minister of Commerce said in an interview published here yesterday.

Mr. Dharia told newsmen before leaving for home that the Janata Government would never support the demand of the Tamil United Liberation Front for division of Sri Lanka. No party in Tamil Nadu could also lend support to the TULF demand. Even supposing some political party in Tamil Nadu wanted to, the Central Government would never permit it. "our desire is to see a united Sri Lanka."

On import of Sri Lanka Tamil films, books and periodicals Mr. Dharia said as soon as he returned to India he would consult the Tamil Nadu Chief Minister, on this matter. He pointed out that any way there was no restriction or ban on import of these items into India.

19-1-79

படிப்பகம்